# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.110/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தனபாக்கியம் | Husband's Name | : | செல்வம் |
| Village | : | கோட்டூர் | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 15th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோட்டூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.07.2024 ம் தேதி திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது காவல் ஆய்வாளருடன் தலைமை காவலர் 927 கனகராஜ் மதுவிலக்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது திருத்துறைப்பூண்டி முல்லியாற்றின் அருகே பகல் 12.30 மணியளவில் எங்களை கண்டதும் ஓட எத்தனித்த ஒரு நபரை பிடித்து விசாரிக்க அவர்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:45:34 +0530

பெயர் யோகாம்பினை என கூறினார். அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது வெள்ளை நிற சாக்கு மூட்டையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டிச்சேரி சாராயம் 40 லிட்டர் பிடிக்க கூடிய 4 பாலிதீன் பைகளில் தலா 30 லிட்டர் வீதம் மொத்தம் 120 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அதை முகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் வாடை வீசியது. அதை மேலும் விசாரிக்க அவர் காரைக்கால் வாஞ்சியூரிலிருந்து சாராயம் வாங்கி வந்து அதில் போதை மருந்து கலந்து விற்பனை செய்வதாகவும் அவரிடம் எந்த உரிமமோ அனுமதியோ இல்லை எனவும் கூறினார். மேற்படி யோகாம்பிகையை 12.45 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடத்தில் கைது செய்து அங்கிருந்த தனிநபர் சாட்சிகளான கணேசன், கதிர்வேல் ஆகியோர் முன்னிலையில் யோகாம்பிகையிடமிருந்து 13.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். மேற்படி வாக்குமூலத்தில் மேற்படி 2 சாட்சிகளும் கையெழுத்து செய்தார்கள். 13.45 மணியளவில் தலைமை காவலர் கனகராஜ் மற்றும் எனது முன்னிலையில் எதிரியிடமிருந்து 120 லிட்டர் பாண்டி சாராயத்தை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் தலைமை காவலர் கனகராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1**. 120 லிட்டர் பாண்டி சாராயத்தில் மாதிரிக்கு 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:45:46 +0530

வீதம் விஷ நெடியுடன் கூடிய பாண்டி விஷ சாராயத்தை SHO ஷீல் வைத்து எடுக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் **சா.பொ.1 வரிசை** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மீதமுள்ள 119 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய பாண்டி சாராயத்தை அதே இடத்தில் எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கொட்டி அழித்தார். அந்த அழிப்பு மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் தலைமை காவலர் கனகராஜ் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம். அந்த அழிப்பு மகஜர் **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

திருத்துறைப்பூண்டி காமராஜர் தெரு மக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதி என்றால் சரி. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் தடய பொருளை கைப்பற்றவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆய்வாளர் புள்ளி விபரத்திற்காக போட்ட வழக்கிற்கு ஏற்றாற்போல் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:45:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.110/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கனகராஜ் | Father's Name | : | காத்தையன் |
| Village | : | ஆலிவலம் | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 15th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆலிவலம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.07.2024 ம் தேதி திருத்துறைப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது காவல் ஆய்வாளருடன் தலைமை காவலர் 1058 தனபாக்கியம் மதுவிலக்கு ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது திருத்துறைப்பூண்டி முல்லியாற்றின் அருகே பகல் 12.30 மணியளவில் எங்களை கண்டதும் ஓட எத்தனித்த ஒரு நபரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் யோகாம்பினை என கூறினார். அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:01 +0530

வெள்ளை நிற சாக்கு மூட்டையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டிச்சேரி சாராயம் 40 லிட்டர் பிடிக்க கூடிய 4 பாலிதீன் பைகளில் தலா 30 லிட்டர் வீதம் மொத்தம் 120 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்தார். அதை முகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் வாடை வீசியது. அதை மேலும் விசாரிக்க அவர் காரைக்கால் வாஞ்சியூரிலிருந்து சாராயம் வாங்கி வந்து அதில் போதை மருந்து கலந்து விற்பனை செய்வதாகவும் அவரிடம் எந்த உரிமமோ அனுமதியோ இல்லை எனவும் கூறினார். மேற்படி யோகாம்பிகையை 12.45 மணியளவில் ஆய்வாளர் சம்பவ இடத்தில் கைது செய்து அங்கிருந்த தனிநபர் சாட்சிகளான கணேசன், கதிர்வேல் ஆகியோர் முன்னிலையில் யோகாம்பிகையிடமிருந்து 13.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். மேற்படி வாக்குமூலத்தில் மேற்படி 2 சாட்சிகளும் கையெழுத்து செய்தார்கள். 13.45 மணியளவில் தலைமை காவலர் கனகராஜ் மற்றும் எனது முன்னிலையில் எதிரியிடமிருந்து 120 லிட்டர் பாண்டி சாராயத்தை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் தலைமை காவலர் தனபாக்கியம் முதலாவது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 120 லிட்டர் பாண்டி சாராயத்தில் மாதிரிக்கு 650 மிலி பிடிக்க கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் தலா 500 மிலி வீதம் விஷ நெடியுடன் கூடிய பாண்டி விஷ

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2025.12.15 14:46:07 +0530

சாராயத்தை SHO ஷீல் வைத்து எடுக்கப்பட்டது. மேற்படி 2 கண்ணாடி பாட்டில்கள் ஏற்கனவே சா.பொ.1 வரிசை ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 119 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய பாண்டி சாராயத்தை அதே இடத்தில் எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கொட்டி அழித்தார். அந்த அழிப்பு மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் தலைமை காவலர் தனபாக்கியம் முதல் சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம். அந்த அழிப்பு மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

திருத்துறைப்பூண்டி காமராஜர் தெரு மக்கள் குடியிருப்பு அதிகம் உள்ள பகுதி என்றால் சரி. நான் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை எனவும் தடய பொருளை கைப்பற்றவில்லை எனவும் சொன்னால் தவறு. ஆய்வாளர் புள்ளி விபரத்திற்காக போட்ட வழக்கிற்கு ஏற்றாற்போல் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.110/2025**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அய்யப்பன் | Father's Name | : | தங்கவேல் |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 15th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டியில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வேலை செய்கிறேன். 02.07.2024 ம் தேதி நானும் குசேலனும் மதியம் 2.45 மணியளவில் யோகாம்பிகை வீட்டருகே சென்று கொண்டிருந்தபோது போலீசார் அவர் வீட்டையும் சுற்றியுள்ள இடத்தையும் பார்வையிட்டு வரைபடமும் பார்வை மகஜரும் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் 2 வது சாட்சியாகவும் குசேலன் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:19 +0530

**அ.சா.ஆ.3**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் படம் வரைந்ததற்கு அத்தாட்சியாகத்தான் கையொப்பம் போட்டேன். போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.110/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கதிர்வேல் | Father's Name | : | ரெத்தினம் |
| Village | : | ஆட்டூர் | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 15th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆட்டூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். 02.07.2024 ம் தேதி பகல் 12.30 மணியளவில் யோகாம்பிகை என்பவரை போலீசார் கைது செய்தார்கள். அப்போது யோகாம்பிகை போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பொடுத்தார். அப்போது நானும் கணேசனும் அந்த இடத்தில் இருந்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதல் சாட்சியாகவும் கணேசன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4**.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:31 +0530

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டதால் கையொப்பம் மட்டும் போட்டேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.110/2025**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கணேசன் | Father's Name | : | வரதராஜன் |
| Village | : | திருத்துறைப்பூண்டி | Taluk | : | திருத்துறைப்பூண்டி |
| Calling | : | | Age | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 15th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருத்துறைப்பூண்டியில் வசித்து வருகிறேன். நான் டிரைவர் வேலை செய்கிறேன்.02.07.2024 ம் தேதி பகல் 12.30 மணியளவில் யோகாம்பிகை என்பவரை போலீசார் கைது செய்தார்கள். அப்போது யோகாம்பிகை போலீசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பொடுத்தார். அப்போது நானும் கதிர்வேலும் அந்த இடத்தில் இருந்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் 2 வது சாட்சியாகவும் கதிர்வேல் முதல் சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5**.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:43 +0530

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போட்டுவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து போட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டதால் கையொப்பம் மட்டும் போட்டேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.15 14:46:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.